


தஞ்சை மாவட்டம், கும்பகோணம் காசிராமன் தெருவில் உள்ள கிருஷ்ணா பள்ளியில் கடந்த 2004ம் ஆண்டு ஜுலை 16ந் தேதி ஏற்பட்ட தீ விபத்தில் 94 குழந்தைகள் உடல் கருகி இறந்தனர். இந்த துயரச் சம்பவத்தின் 22 வது நினைவு நாளில், அவர்கள் படித்த பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 94பிள்ளைகளின் திருவுருவப் படத்திற்கு தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், செ இராமலிங்கம், கோ.வி.செழியன் எம்.எல்.ஏ மற்றும் கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகர நிர்வாகிகள்,பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல குழு தலைவர்கள், கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

### கழக ஆட்சியில் – காரைக்குடி புலவர் ஆ.பழநியின் நூல்களை நாட்டுடைமையாக்கிய

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு - இன்று பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – முன்னணியினர் பங்கேற்பு!

காரைக்குடி, ஜுலை 18-

கடந்த ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், ஏப்.29 இல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளையொட்டி, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் "தமிழ் வளர்ச்சி நாள்" விழா தமிழகம் முழுவதும் ஒருவாரம் நடந்தது.

இந்த விழாவில் இறுதி நாளான 2025 மே -05ம் நாள் சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்ட நிகழ்வில் "திராவிட மாடல்" முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று, காரைக்குடி "பகுத்தறிவுப் பாவலர்" ஆ.பழநி எழுதிய படைப்பிலக்கிய 18 நூல்களையும் நாட்டுடைமை செய்து அரசாணையும், பரிவுத் தொகை காசோலையும் வழங்கினார்கள். இதனை புலவரின் மரபுரிமை வாரிசுகளான சுப.அழகுப் பாண்டியனும் அவரது பேரன்களும் பெற்றுக் கொண்டனர். அத்தொகையினை வங்கியில் முதலீடு செய்து "புலவர் ஆ.பழனி அறக்கட்டளை" யும் தொடங்கி பதிவு செய்தனர்.

**நன்றி - பாராட்டு விழா!**

புலவரின் நூல்களை நாட்டுடைமையாக்கிய "திராவிட மாடல்" முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் விழா, இன்று (சூலை 18 சனிக்கிழமை) மாலை காரைக்குடியில் செக்காலை பேக்கரி - போலீஸ் காலனி அருகில் உள்ள கிருஷ்ணா கார்டன் அரங்கில் நடக்கின்றது.

அறக்கட்டளையின் தலைவர் சுப.அழகுபாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

துணை மேயர் நா.குணசேகரன், தொழிலதிபர்கள் சா.நடராஜன், கா.நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சாமி திராவிட மணி நோக்கவுரையாற்றுகிறார்.

வா.கிருட்டின பிரசாத் நன்றியுரையாற்றுகிறார்.

தி.என்னாரெசு பிராட்லா இணைப்புரை வழங்குகிறார்.

இதில் மாவட்ட தி.மு.க. செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகி கவிச்சுடர் கவிதைப்பித்தன், தி.க.து. பொதுச் செயலர் பிரின்சு என்னாரெசு பெரியார், முனைவர் மா.சுப.சரளா உட்பட பலரும் கலந்து கொள்கிறார்கள்.

### அடுத்த ஆறு மாதங்களில் நில அளவை – மண் பரிசோதனைப் பணிகளை முடிக்க இலக்கு!

# சென்னை - பெங்களூரு இடையே பூமிக்கடியில் அதிவேக புல்லட் ரயில்!

## திட்ட அறிக்கை தயாரிக்க – தேசிய அதிவேக ரயில் கழகம் புதிய ஒப்பந்தம்!

சென்னை, ஜுலை 18-

சென்னை - பெங்களூரு புல்லட் ரயில் பூமிக்கடியில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் பெங்களூரு இடையே அதிவேக புல்லட் ரயில் இயக்குவதற்கான திட்டப் பணிகள் அடுத்த முக்கிய கட்டத்தை எட்டியுள்ளன. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை புதுப்பிக்க வும், புதிய பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய அதிவேக ரயில் கழகம் புதிய ஒப்பந்தம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

**பூமிக்கடியில் புல்லட் ரயில்**

ஏற்கெனவே 2024 செப்டம்பர் மாதத்தில் சென்னை பெங்களூரு மைசூரு வழித்தட புல்லட் ரயில் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், சென்னை பெங்களூரு இடையேயான பகுதிக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு தற்போது பணிகள் துவங்கப் பட்டுள்ளன. புதிதாக கோரப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் மூலம், அடுத்த 150 நாட்களுக்குள் நில அளவை, மண் பரிசோதனை மற்றும் வழித்தட மறுஆய்வுப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், புல்லட் ரயில் பாதை செல்லும் வழியில் உள்ள கூவம், பாலாறு போன்ற முக்கிய ஆறுகளைக் கடக்கும்போது எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க விரிவான வெள்ள அபாய மற்றும் நீரியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் மற்றும் அய்.சி.எப் ரயில் பெட்டி தொழிற்சாலை பகுதிகளை கடக்கும் இடங்களில் மேம்பால ரயில் பாதைகளை வடிவமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக பொதுப்பணித்துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்து தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு, புதிய நில அளவைப் படங்களும், தேவைப்பட்டால் புதிய நிலக் கையகப்படுத்துதல் திட்டங்களும் தயாரிக்கப்பட உள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. பரந்தூரில் அமையவிருந்த புதிய பசுமைவழி விமான நிலைய திட்டத்தை கைவிட மாநில அரசு முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படும் நிலையிலும், சென்னை பெங்களூரு இடையேயான 306.2 கி.மீ நீள புல்லட் ரயில் பாதையில் பரந்தூர் ரயில் நிலையம் தொடர்ந்து தக்க வைக்கப்பட்டுள்ளது.

இந்த புல்லட் ரயில் பாதை சென்னை, பூவிருந்த வல்லி, பரந்தூர், சித்தூர், பங்காருபாலம், கோலார், மாலூர், ஒயிட் பீல்டு, பெங்களூரு ஆகிய ஊர்களை இணைக்கும் என கூறப்படுகிறது. குறிப்பாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பூமிக்கு அடியில் சுரங்கப் பாதையாக அமைக்கப்படும். இது சென்னை மெட்ரோ ரயிலுடன் இணைக்கப்பட்டு பயணிகள் எளிதாக மாற வழிவகை செய்யப்படும். அதே போல் பூந்தமல்லி (மேம்பாலம்) தேசிய நெடுஞ்சாலை4இன் வடக்கு பகுதியில் மேம்பால நிலையமாக அமைக்கப்பட உள்ளது.

இது வெளிவட்ட சாலை, மெட்ரோ ரயில் 2ஆம் கட்டப் பணிகள், சென்னை விமான நிலையம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும். பரந்தூர் (மேம்பாலம்) முன்மொழியப்பட்ட விமான நிலைய பகுதியின் தெற்கு பக்கத்தில் மேம்பால நிலையமாக அமையும். இது சென்னை பெங்களூரு விரைவுச்சாலை மற்றும் என்.எச்48 உடன் இணைப்புச் சாலைகள் மூலம் இணைக்கப்படும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 44 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 44வது வட்ட கழக செயலாளர் துரைசாமி தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா முன்னிலையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், முருகன், செல்வன், பெருமாள், கிருஷ்ணன், முருகேசன், கண்ணன், ரெஞ்சித் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஊடகவியலாளர் விஜயன் விவகாரம்:

# கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சி!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, ஜுலை. 18-

மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



புதியதலைமுறை தொலைக்காட்சியின் நெறியாளரும் ஊடகவியலாளருமான விஜயன், விசாரணை என்ற பெயரில் மீண்டும் மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டதோடு, அவரது செல்போன் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் கடும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகவியலாளர்களின் கடமை அதிகாரத்தை கேள்வி கேட்பதும், மக்களுக்குத் தகவல்களை கொண்டு சேர்ப்பதும் ஆகும். ஆனால் அண்மைக் காலமாக விமர்சனக் குரல்களை அடக்குவதற்கும், ஊடகங்களை அச்சுறுத்துவதற்கும் விசாரணை அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்ற அச்சம் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில், ஊடகவியலாளர் விஜயன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை ஊடக உலகிற்கு விடுக்கப்படும் எச்சரிக்கைச் செய்தியாகவே பார்க்கப்படுகிறது.

சட்டத்தின் பெயரால் நள்ளிரவு நேரங்களில் விசாரணைக்காக அழைப்பது, வீட்டிற்குச் சென்ற பிறகும் மீண்டும் வருமாறு வற்புறுத்துவது, சட்ட நடைமுறைகள் குறித்த வெளிப்படைத்தன்மை இன்றி செல்போனை பறிமுதல் செய்வது போன்றவை ஜனநாயக ஆட்சிக்கு ஏற்ற செயல்கள் அல்ல. இது காவல்துறையின் அதிகார துஷ்பிரயோகமாகவும், கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சியாகவும் விளங்குகின்றது.

தமிழகம் கருத்துச் சுதந்திரத்திற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் பெயர் பெற்ற மண்ணாகும். அவசரநிலை காலத்தை நினைவூட்டும் வகையில் ஊடகவியலாளர்கள் மீது அழுத்தம் செலுத்தும் போக்கு தமிழகத்தில் உருவாக அனுமதிக்கக் கூடாது. ஊடகங்களை அச்சுறுத்தி மௌனமாக்கும் முயற்சிகள் எந்த அரசுக்கும் நல்ல பெயரை ஏற்படுத்தாது.

எனவே, ஊடகவியலாளர் விஜயனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ள செல்போன் உடனடியாக திருப்பி வழங்கப்பட வேண்டும். மேலும், விசாரணை என்ற பெயரில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மற்றும் அலைக்கழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் உயிர்நாடிகள் ஆகும். அவற்றை பாதுகாக்கத் தவறும் எந்த ஆட்சியும் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தும் என்பதை தவெக அரசு உணர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மோடி அரசால் நிகழ்ந்த விபரீதம் – இஸ்ரோவின் பெரும் தோல்விகள்!

# 'ககன்யான்' திட்டத்துடன் தொடர்புடைய 100 இஸ்ரோ விஞ்ஞானிகள் திடீர் விலகல்!

## ஒன்றிய அரசு கடும் அதிர்ச்சி - பணி விலகும் விதிகளைக் கடுமையாக்கி உத்தரவு!

புதுடெல்லி, ஜுலை 18-

இந்தியாவின் விண்வெளி நிறுவனத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறி வருவதை தொடர்ந்து பணியில் இருந்து விலகும் விதிகளை அரசு கடுமையாக்கி உத்தரவிட்டுள்ளது. இஸ்ரோவின் ஏ பிரிவு அறிவியல்/தொழில்நுட்ப அதிகாரிகளிடம் இருந்து தாமாக முன்வந்து விருப்ப ஓய்வு மற்றும் , பதவி விலகி வருவதாக கூறப்படு கின்றது. இதுவரை 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பதவி விலகி இருப்பது ஒன்றிய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமாக்கள் தொடர்பான விதிகளை கடுமையாக்கி இஸ்ரோவின் முக்கிய விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கு விண்வெளித் துறை ஒரு புதிய உத்தரவை பிறப்பி த்துள்ளது. இந்த அதிகாரப்பூர்வ உத்தரவில், 'இஸ்ரோவில் சமீபகாலமாக, மதிப்புமிக்க ககன்யான் மற்றும் பிற முக்கிய திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் உட்பட, இஸ்ரோவின் 'குரூப் ஏ' அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களிடமிருந்து விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமா கோரிக்கைகள் பெருமளவில் வருவதாகவும், இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கவனிக்கப் பட்டுள்ளது.

**பாதிக்கப்படும் திட்டங்கள்!**

இஸ்ரோவில் மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் ககன்யான் திட்டம், நிலவிலிருந்து மாதிரிகளை எடுத்து வரும் திட்டமான சந்திரயான்4; இந்தியாவின் விண்வெளி நிலையமாக அமையவுள்ள பாரதிய விண்வெளி நிலையம், செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் திட்டமான மங்கள்யான்2 திட்டப்பணிகள் அப்படியே முடங்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**மோடி அரசால் நடந்த விபரீதம்!**

இந்தியாவை பொறுத்தவரை விண்வெளித்துறையில் இஸ்ரோ மட்டுமே கோலோச்சியது. ஆனால் 2020ல் தனியார் நிறுவனங்களுக்கு விண்வெளித் துறையை மோடி அரசு திறந்து விட்டது.

2023ல் இந்திய விண்வெளி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதும் நாடு முழுவதும் தனியார் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவை இஸ்ரோவில் இருக்கும் மூத்த விஞ்ஞானிகளை குறிவைத்து அதிக சம்பளம் கொடுத்து வேலைக்கு எடுத்தன.

இந்தியாவில் தற்போது 400க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன; இவை ரூ. 50 ஆயிரம் கோடிமதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளன. இதில் 2025ம் ஆண்டில் மட்டும் சுமார் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது.

பிக்சல், துருவா ஸ்பேஸ், ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ், அக்னிகுல் காஸ்மாஸ், பெலாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ் போன்ற தனியார் நிறு வனங்கள் இத்துறையில் முன்னணியில் உள்ளன.

இஸ்ரோவில் இருந்து சமீபத்தில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் விலகி உள்ளனர். இதில் பெங்களூருவில் உள்ள யுஆர் ராவ் செயற்கை கோள் மையம் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள மையங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் வெளியேறியுள்ளனர்.

விலகிய விஞ்ஞானிகளில் சிலர் விண்வெளித் துறை சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் இணைந்துள்ளனர்.

விலகியவர்களில் மூத்த விஞ்ஞானி விக்டர் ஜோசப் டி என்பவரும் ஒருவர். இவர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் 'ஜியோ சின்க்ரோனஸ் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் எம்கே III (ஜிஎஸ்எல்வி எம்கே III) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார். 'ககன்யான்' விண்வெளிப் பயணத் திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள ஏவு வாகனமான எல்விஎம் 3ன் திட்டத் தலைவராக சுமார் 13 மாதங்கள் பணியாற்றிய பிறகு, விக்டர் ஜோசப் பிப்ரவரி மாதத்தில் பணியிலிருந்து விலகியதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். சோமநாத், சென்னையைச் சேர்ந்த விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனமான 'அக்னிகுல் காஸ்மோஸ்' இயக்குநர்கள் குழுவில் பார்வையாளராக இணைந்துள்ளார். 2025 ஜனவரி வரை இஸ்ரோ தலைவராகப் பணியாற்றிய அவர், நிலவின் தென் துருவத்திற்கு அருகில் சந்திரயான்3 வெற்றிகரமாகத் தரையிறங்கியது மற்றும் இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலமான ஆதித்யாஎல்1 ஏவப்பட்டது உள்ளிட்ட பல முக்கியத் திட்டங்களை வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரோ எதிர்கொண்ட பெரும் தோல்விகள்!**

இஸ்ரோவில் இருந்து மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் இஸ்ரோவின் விண்வெளி திட்டங்கள் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்துள்ளன. அதன் விவரம்:

இஸ்ரோவின் நம்பகமான 'போலார் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள்' (பிஎஸ்எல்வி) ஏவு வாகனம், ஓராண்டுக்குள் இரண்டு தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது.

ஜனவரி மாதத்தில், இஓஎஸ் என்1(EOSN1) புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் பல வணிகரீதியான செயற்கைக்கோள்களைச் சுமந்து சென்ற பிஎஸ்எல்விசி62 ஏவு வாகனம், அதன் மூன்றாம் கட்டத்தின் இறுதியில் ஏற்பட்ட பிரச்னைகள் காரணமாகத் திட்டமிடப்பட்ட பாதையிலிருந்து விலகிச் சென்றது.

கடந்த ஆண்டு மே மாதம், பிஎஸ்எல்வி சி61/EOS09 (ரிசாட்1பி) ஏவு வாகனம் 529 கி.மீ உயரத்திலுள்ள சூரியஒத்திசைவு சுற்றுப்பாதையை அடையத் தவறியது. மூன்றாம் கட்டத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட குறைபாட்டினால், சுமார் 203 வினாடிகளுக்குப் பிறகு எரிபொருள் அறையின் அழுத்தம் (திடீரெனக் குறைந்ததால், அப்பயணம் நிறுத்தப்பட்டு அந்த ரேடார் செயற்கைக்கோள் அழிந்தது.

இஸ்ரோ விஞ்ஞானிகள் பதவி விலகுவது குறித்த கேள்விக்கு ஒன்றிய தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில்,' இஸ்ரோவில் மிகப் பெரிய பணியாளர் படை உள்ளது. சிலர் வெளியேறும்போது பலரும் புதிதாக இணைகிறார்கள். பலர் சென்றுள்ளனர், பலர் வந்துள்ளனர். இதில் எந்த சர்ச்சையும் இல்லை' என்றார்.

### அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில் –

# ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்படும்!

## கல்லூரிக் கல்வி ஆணையரகம் தகவல்!

சென்னை, ஜுலை. 18-

தமிழ்நாட்டில் 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளும் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளும் உள்ளன. இவற்றில் 58 கல்லூரிகள் கிரேடு 1 கல்லூரிகள், எஞ்சிய 130 கல்லூரிகள் கிரேடு 2 கல்லூரிகள். இந்நிலையில், 25 கிரேடு1 கல்லூரிகளிலும், 100 கிரேடு2 கல்லூரிகளிலும் நீண்ட காலமாக முதல்வர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. இதுதவிர கிரேடு1 கல்லூரி முதல்வர் நிலையில் 2 மண்டல இணை இயக்குநர் பதவியும் காலியாக இருக்கிறது.

அரசு கல்லூரிகளில் நீண்ட காலமாக காலியாகவுள்ள உள்ள முதல்வர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது குறித்து கல்லூரி கல்வி ஆணையரகத்தில் கேட்ட போது, "கிரேடு1 அந்தஸ்து கல்லூரிகளில் முதல்வர் பதவி காலியாகவுள்ள 24 இடங்களில் முதல்கட்டமாக 12 இடங்களை நிரப்புவதற்கான தகுதி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, விரைவில் அந்த காலியிடங்கள் நிரப்பப்பட்டுவிடும். அதேபோல், எஞ்சிய கிரேடு1 கல்லூரிகளிலும் கிரேடு2 காலியிடங்களிலும் ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பபட்டுவிடும். இந்த பணியை ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம்" என்றனர்.